**செய்தி வெளியீடு எண்: 032** **நாள்: 11.01.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.1.2019 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், காஞ்சிபுரம் மாவட்டம், எடயாத்தூர் ஊராட்சியில், பாலாற்றின் குறுக்கே 9 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, மதுரவாயலில் 6 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தையும், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கல்லக்குடி வைப்பம் சாலையில் 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுபாலம் ஆகியவற்றை திறந்து வைத்து, 1 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், காஜாமலை பகுதியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்காக கட்டப்படவுள்ள குடியிருப்பு கட்டடம் மற்றும் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், சுத்தமல்லி வடகடல் சாலையில் கட்டப்படவுள்ள உயர்மட்ட பாலம் ஆகியவற்றிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், சாலை வசதிகள், பாலங்கள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதத்தில், பழுதடைந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், எடயாத்தூர் ஊராட்சியில், பாலாற்றின் குறுக்கே 9 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இப்புதிய பாலம் திறக்கப்பட்டதன் மூலம், விளாகம், பாண்டூர், எடயாத்தூர், சின்ன எடயாத்தூர், இரும்புலிச்சேரி, அட்டவட்டம், நெரும்பூர், நல்லாத்தூர் மற்றும் லத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைவதோடு, சுமார் 20 கிலோ மீட்டர் பயண தூரமும் குறைகிறது.

மேலும், சென்னை, மதுரவாயலில் 6 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்காக கட்டப்பட்டுள்ள 12 குடியிருப்புகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம், அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கல்லக்குடி – வைப்பம் சாலையில் 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுபாலம், என மொத்தம் 17 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், காஜாமலை பகுதியில் 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்காக கட்டப்படவுள்ள குடியிருப்பு கட்டடம் மற்றும் அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், சுத்தமல்லி – வடகடல் சாலையில் 1 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உயர்மட்டபாலம் ஆகியவற்றிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு 50 புதிய ஜீப்புகள் வழங்கப்படும் என்று 2018–19ஆம் ஆண்டின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட திட்ட இயக்குநர்களுக்கு 13 ஜீப்புகள், செயற்பொறியாளர்களுக்கு 2 ஜீப்புகள், உதவி இயக்குநர், உதவி திட்ட அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு 32 ஜீப்புகள், வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு 3 ஜீப்புகள், என மொத்தம் 3 கோடியே 20 லட்சத்து 62 ஆயிரத்து 488 ரூபாய் மதிப்பீட்டிலான 50 ஜீப்புகளை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் அடையாளமாக, 7 ஓட்டுநர்களுக்கு ஜீப்புகளுக்கான சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தேக்கநிலைப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்ட உதவிப்

பொறியாளர் காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 29 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 நபர்களுக்கு உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் முனைவர் கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**